**இலங்கை நீதிவான்களின் நிறுவனம் - 2016**

இலங்கை நீதிவான்களின் நிறுவனத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1985 இன் 46 ஆம் இலக்க இலங்கை நீதிவான்களின் நிறுவனச் சட்டத்தின் 10(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவில் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் தற்துணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களில் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இலங்கை நீதிவான்களின் நிறுவனத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் மற்றும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றேன் என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 237 மற்றும் நிதிப் பிரமாணம் 751 இன் பிரகாரம், மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 6,468,061 தொகை பெறுமதியான அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்திகள், கணனி உபகரணங்கள், நூலகப் புத்தகங்கள் மற்றும் காகிதாகிகள் தொடர்பான கொடுப்பனவு உறுதிச் சான்றுகளில் பண்டங்கள் கிடைத்திருந்ததற்கான நிலையான சொத்துக்கள் பதிவேடு, பொருட் பதிவேடு மற்றும் பயன்பாட்டு பதிவேடு ஆகியவற்றில் குறிப்பிட்ட பண்டங்கள் உட்படுத்தப்பட்டதாக சான்றிதழ் ஒன்று உட்படுத்தியிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிறுவனத்தின் நிதி விளைவுகள் ரூபா 30,740,552 ஆன மிகையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,902,742 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 28,837,810 ஆன முன்னேற்றமொன்று காணக்கூடியதாக இருந்தது. இயலளவு அபிவிருத்தி செயற்திட்டமொன்றிற்காக ரூபா 42,360,676 தொகை மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்தல், நிதி விளைவுகளில் மேற்கூறிய முன்னேற்றத்திற்கு முக்கிய காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்யும் போது 2012 ஆண்டின் போது ரூபா 5,340,626 தொகையாக காணப்பட்ட பற்றாக்குறை தளம்பல்களுடன் 2016 ஆண்டளவில் ரூபா 30,740,552 இற்கான மிகை ஒன்று வரை முன்னேறியிருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கல் செய்யும் போது 2012 ஆண்டிற்கான பங்களிப்பு ரூபா 4,139,605 ஆன மறை பெறுமதி ஒன்றினைக் கொண்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி அளவில் ரூபா 40,272,542 தொகை வரை முன்னேறியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

1985 இன் 46 ஆம் இலக்க இலங்கை நீதிவான்களின் நிறுவனச் சட்டத்தின் பிரகாரம் நீதி உத்தியோகத்தர்களின் தொழிற்துறை தேர்ச்சியினை முன்னேற்றுதல் மற்றும் அவர்களின் அறிவு விருத்திக்காக கூட்டங்கள், கருத்தரங்குகள், விரிவுரைகள், செயலமர்வுகளை ஒழுங்கு செய்தல் நிறுவனத்தின் பிரதான நோக்கமாக இருந்தது.

மேற்கூறிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மீதான பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி நீதித்துறை உத்தியோகத்தர்களுக்காக 58 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 08 செயலமர்வுகள் நடாத்துவதற்காகத் திட்டமிட்டிருந்த போதிலும் செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை 21 மற்றும் செயலமர்வுகள் 03 ஆகக் காணப்பட்டமையால் எதிர்ப்பார்த்த செயலாற்றுகையை அடையப்பட்டிருக்க வில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2016 ஆண்டிற்கான பாதீட்டு பிரேரணை ஒன்றான இலங்கை நீதிவான்களின் இயலளவு அபிவிருத்திக்காக நீதி அமைச்சின் தலைப்பு 110 இல் இருந்து நிறுவனத்திற்கு ரூபா 63,000,000 இற்கான நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டு 4 பிரதான செயற்பாடுகளின் கீழ் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அவற்றில் ஒரு செயற்பாடான கணனிகள் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் ரூபா 40,000,000 இல் இருந்து 99.74 சதவீதம் செலவிடப்பட்டு கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் மேலும் இரண்டு செயற்பாடுகளாகிய நீதிவான்களுக்கு வெளிநாட்டு புலமைப் பரிசில்கள் வழங்குதல் மற்றும் பதவியணிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் முறையே ரூபா 12,000,000 தொகை மற்றும் ரூபா 1,000,000 தொகை முற்றாகவும், இலங்கை நீதிவான்களின் நிறுவனத்தை வலைப்பின்னலை நிறுவுவதற்காக (Establishing SLJI Net) ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 10,000,000 ஆன நிதியேற்பாடுகளில் ரூபா 7,538,128 தொகை அதாவது 75.4 சதவீதம் நிதியேற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்ததினால் பாதீட்டு பிரேரணைகள் உரிய முறையில் செயற்படுத்துவதற்கு தவறியிருந்ததென அவதானிக்கப்பட்டன.

### 4.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்கு சேர்ப்பதற்காக வெளியிடப்பட்ட செய்தித்தாள் விளம்பரத்தை தவறுகளுடன் வெளியிடப்பட்டிருந்தமையால் அவ் விளம்பரத்தை மீண்டும் வெளியிடுவதற்கு நேரிட்டிருந்ததுடன் தவறுகளுடனான அறிவித்தல் பிரசுரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 225,112 இற்கான தொகை சிக்கனமற்ற செலவு ஒன்றாகியது.

### 4.3 நிதியங்கள் குறைவாகப் பயன்படுத்துதல்

நிறுவனத்தினால் அரசாங்க வங்கியொன்றில் பேணப்படும் நடைமுறைக் கணக்கில் ஆண்டு பூராகவும் குறைந்த மீதியாக ரூபா 2,172,403 தொகை குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்டதுடன் அதனை 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் பிரிவு 11 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை கடைபிடித்து குறுகிய கால முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### 4.4 பதவியணி முகாமைத்துவம்

இலங்கை நீதிவான்களின் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படும் 03 பதவிகள் 2017 ஜூன் 01 ஆம் திகதி அளவிலும் வெற்றிடமாகக் காணப்பட்டது.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

-------------------------------------------------------

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

---------------------------------------

நிதிப் பிரமாணங்கள் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. அத்துடன் மீளாய்வாண்டின் போது நீதி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு அலகின் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் நீதிவான்களின் நிறுவனத்தின் கணக்காய்விற்கு 50 மனித நாட்களுக்கான காலம் ஒன்று ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கையொன்று சமர்ப்பித்திருக்காமையால் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது என உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 5.2 பாதீட்டு கட்டுப்பாடு

----------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு மற்றும் 2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.5 ஆம் பந்தியின் படி ஒவ்வொறு நிதியாண்டுகளுக்குமான பாதீடு ஒன்று தயாரிக்கப்பட்டு குறிப்பிட்ட நிதியாண்டு ஆரம்பமாவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் நிறுவனத்தின் நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அதன் பிரதியொன்று குறிப்பிட்ட ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீடு நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான 17 செலவு விடயங்களில் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவுகளிடையே 28 சதவீதம் முதல் 1068 சதவீதம் வரையும் முரண்கள் காணப்பட்டமை, மீளாய்வாண்டிற்கான நிதியேற்பாடுகள் அங்கீகரித்திருக்காத செலவுகளுக்காக ரூபா 4,228,697 தொகை செலவிடப்பட்டிருத்தலும் மற்றும் இயந்திரங்கள் மற்றும் மின்சார உபகரணங்கள் பெற்றுக்கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் ரூபா 1,500,000 தொகையினை பயன்படுத்தியிருக்காமை ஆகிய காரணங்களினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.